*கவனிக்க.- 2021.06.18 ஆந் திகதிய 2233 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி III, பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ), பகுதி IV (ஆ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2234 - 2021 ජුනි මස 25 වැනි සිකුරාදා - 2021.06.25

*2234 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1348 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1349 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்துமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1345-B 82243-5,403 (2021/ 06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## கப்பற் சரக்கு களஞ்சிய வசதிகள், முனைய மேடைகள், துறைமுக வழங்கல் வசதிகள், படகு மற்றும் கப்பற்துறைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

கப்பற் சரக்கு களஞ்சிய வசதிகள், முனைய மேடைகள், துறைமுக வழங்கல் வசதிகள், படகு மற்றும் கப்பற்துறைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஊடகப் பிரிவின் பொருட்டு தற்காலிக அடிப்படையில் நியமிப்பதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளின் பொருட்டு தகைமைகளும் அனுபவமும் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**பதவி** : புகைப்பட கெமரா கலைஞர் - பதவி எண்ணிக்கை 01
வீடியோ கெமரா கலைஞர் - பதவி எண்ணிக்கை 01

**பதவி நிலை**.- தற்காலிகமானது.

**சம்பளம்**.- மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 29,840.00 மற்றும் ரூபா 7,800.00 இற்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.

**கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைகளில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**.- ஒளிப்பதிவுத் துறை மற்றும் வீடியோ கெமராத் துறை தொடர்பான தேசிய தொழிற் தகைமைச் சான்றிதழ் NVQ 05 ஆம் மட்டத்திற்கு குறையாத பாடநெறியொன்றினைக் கற்று சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**பதவி** : புகைப்படக் கெமரா உதவியாளர் - பதவி எண்ணிக்கை 01

**பதவி நிலை**.- தற்காலிகமானது.

**சம்பளம்**.- மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 24,250.00 மற்றும் ரூபா 7,800.00 இற்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.

**கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைகளில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**.- குறித்த துறையில் பெற்றுள்ள தொழிற் தகைமைகள் விசேட தகைமையொன்றாக கருதப்படுகின்றது.

**வயது**.- 18 வயதிலும் குறையாத 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- பொருத்தப்பாட்டு மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் கூடிய தகுதியுடையவர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**ஏனையவைகள் :**

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவியில் ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக விண்ணப்பப்படிவத்தினைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் அத்தகைமைகள் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் முழுமையான விபரங்களுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம், பிறப்புச் சான்றிதழ், கல்வி, தொழில் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 2021.07.16 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிடல் வேண்டும். குறித்த தினத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள், கையொப்பமிடப்படாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
கப்பற் சரக்கு களஞ்சிய வசதிகள், முனைய மேடைகள், துறைமுக வழங்கல் வசதிகள்,
படகு மற்றும் கப்பற்துறைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

இலக்கம் 45, லேடன் பெஸ்டியன் மாவத்தை,
கொழும்பு 01,
2021, யூன் 25.

06-426

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில் அமைச்சு

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவியிலுள்ள 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகைமையுள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 *நியமனம்.-* தொழில் அமைச்சு செயலாளரின் வேண்டுகோளின் அடிப்படையில், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், ஆகக்கூடிய புள்ளிகளின் ஒழுங்குவரிசையின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

3.0 *வேதன அளவுத்திட்டம்.-* 03/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின்படி, இந்தப் பதவிக்கு ஏற்புடையதான மாதாந்த வேதன அளவுத்திட்டம் MN - 1 - 2016 - ரூபா 27,140.00 - 10 x 300 - 11 x 350 - 10 x 495 - 10 x 660 - ரூபா 45,540.00.

4.0 *சேவை நிபந்தனைகள் :*

4.1 இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். அலுவலர்கள், ஓய்வூதியங்கள் தொடர்பில் அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற ஏதேனும் கொள்கை முடிபுக்கு கட்டுப்படுகின்றனர் என்று வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். மேலும், இந்தப் பதவி, மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலப்பகுதியொன்றுக்கு அமைவானதாகும்.

4.2 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அனைத்து அலுவலர்களும், 18/ 2000 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை நியதிகளின்படி நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்குள் ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

4.3 தொழில் புரியும் இடம், கொழும்பு 05, தொழில் செயலகக் கட்டிடத்தில் 07 ஆவது தளத்தில் அமைந்துள்ள வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் என்பதுடன், தேவையானபோது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள நடமாடும் தொழில் நீதிமன்றங்களில் கடமைகளை ஆற்ற வேண்டியிருக்கின்றது.

4.4 முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல்பரீட்சையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் நிறைவுறுவதற்கு முன்னர் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

4.5 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களின் பொது நிபந்தனைகள், பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை ஒழுங்குகள், தாபன விதிக்கோவையினதும், நிதி ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகள், காலத்திற்கு காலம் அவற்றின் மீது செய்யப்பட்ட திருத்தங்கள், அமைச்சின்/ நிறுவனத்தின் ஏனைய கட்டளைகள் மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் தரப்படுகின்ற நிபந்தனைகள் அத்துடன் உரிய காலப்பகுதியில் அவற்றின் மீது ஆக்கப்படவுள்ள திருத்தங்கள் ஆகியவற்றுக்கமைவாக சுருக்கெழுத்தாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர்.

5.0 *தகைமைகள் :*

5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

5.2 விண்ணப்பப்பத்திரத்தின் முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

5.3 மிகச் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

5.4 கல்வித் தகைமைகள் :

(i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் முதலாவது மொழியிலும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்), கணிதம் மற்றும் ஏனைய இரண்டு பாடங்களிலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) புதிய பாடத்திட்டத்தின் கீழ் கல்விப் பொதுத்தராதர (உயர் தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்திலேனும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் ஆங்கில மொழி தவிர்த்து) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.5 *தொழில்சார் தகைமைகள்.*- மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்தில் மற்றும் கணினி தட்டெழுத்தில் ஆறு (06) மாத கற்கை நெறியொன்றினை வெற்றிகரமாக நிறைவு செய்து, சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தலும் வேண்டும்.

குறிப்பு.- சுருக்கெழுத்து மற்றும் கணினி தட்டெழுத்திற்காக மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் கீழே தரப்படுகின்றன :

* தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் ;
* தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள் ;
* தேசிய இளைஞர் மன்றத்தின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள் ;
* இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வருகின்ற பயிற்சி நிலையங்கள்.

5.6 உடல் தகுதி.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கு உடல், உள ரீதியில் தகுதியுள்ளவராக இருத்தல் வேண்டும்.

5.7 தகைமைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய திகதி.- விண்ணப்பப்பத்திரத்தின் முடிவுத் திகதியான 2021.07.28 ஆந் திகதியன்று மேலே 5 இல் தரப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் ஒவ்வொரு வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6.0 *ஆட்சேர்ப்பு முறைமை.*- இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதானது, முற்றுமுழுதாக எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சையைக் கொண்டிருக்கின்ற திறந்த முறையில் மேற்கொள்ளப்படும்.

6.1 எழுத்துப் பரீட்சை.- இந்த எழுத்துப் பரீட்சை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்படும்.

6.1.1 பரீட்சை பற்றிய விபரங்கள் :

| *வினாத்தாள்* | *காலம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| (i) பொது அறிவு மற்றும் கட்டுரை | 1 மணித்தியாலயம் | 100 | 40 |

6.1.2 பாடவிதானம்.- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடைமுறை அலுவல்கள் பற்றிய பொது அறிவினைப் பரீட்சித்தல், காலத்துக்கு முக்கியமான தலைப்புகளிலிருந்து (பரீட்சார்த்தியின் வெளிப்படுத்தும் ஆற்றல், மொழித் தேர்ச்சி, இலக்கணத்தின் சரியாந்தன்மை மற்றும் எழுத்துப் பிழையின்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.) தெரிவு செய்யப்பட்ட தலைப்பொன்றில் கட்டுரை எழுதுதல்.

6.2 தொழில்சார் பரீட்சை.- தொழில்சார் பரீட்சை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினால் நடத்தப்படும்.

| *வினாத்தாள்* | *காலம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| சுருக்கெழுத்து மற்றும் கணினியில் சிங்கள தட்டெழுத்து (செய்முறை) | - | 100 | 40 |

6.2.1 பாடவிதானம்.- நிமிடமொன்றுக்கு 70 சொற்கள் என்ற வேகத்தில் 05 நிமிடங்களுக்குள் பந்தியொன்றினை குறிப்பெடுத்தல் மற்றும் நிமிடமொன்றுக்கு 07 சொற்கள் என்ற வேகத்தில் குறிப்புக்களை மாற்றுதல், நிமிடமொன்றுக்கு 20 சொற்கள் வேகத்தில் (20 நிமிடங்களில் பந்தியொன்று) தட்டெழுத்தினை மேற்கொள்ளுதல்.

07. *வெற்றிடங்கள் எவ்வாறு நிரப்பப்படுகின்றன.*- எழுத்துப் பரீட்சையிலும், தொழில்சார் பரீட்சையிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள், தகைமைகளை ஆராய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்றின் பின்னர் புள்ளிகளின் ஒழுங்குமுறையின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். இது, திறந்த போட்டிப் பரீட்சையொன்றாகையால், விண்ணப்பதாரிகள் ஆகக் குறைந்தது ஒவ்வொரு சோதனைக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் நாற்பது விகிதத்தை (40%) பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். நடத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், அது தகைமைகளைப் பரிசீலிப்பதற்கு மட்டுமே உரியதாகும்.

08. *பரீட்சைக் கட்டணம்.-* பரீட்சைக் கட்டணம் 500.00 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணமானது, மக்கள் வங்கி, நாரஹேன்பிட்டி கிளை, தொழில் அமைச்சின் இலக்கம் 119-1001-59025666 என்பதற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு வேறாக்கப்பட்டு செல்லாத வகையில் விண்ணப்பப்பத்திரத்தில் ஒட்டப்படுதலும் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

09. *விண்ணப்பங்களைத் தயாரித்தல் :*

9.1 விண்ணப்பமானது, இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும். என்பதுடன்,

(அ) விடய இலக்கம் 01 முதல் 03 வரை முதலாம் பக்கத்திலும், எஞ்சியவை ஏனைய பக்கங்களிலும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அது விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் தெளிவாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்.

(ஆ) விதித்துரைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத மற்றும் உரிய திகதியில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் வழங்கப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரத்தை உரிய முறையில் பூர்த்தி செய்வதற்குத் தவறுவதற்கான இழப்பினை விண்ணப்பதாரிகள் பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுவதுடன், அவரால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அன்றேல் அந்த விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படலாம்.

9.2 பரீட்சை 2021, செத்தெம்பர் 05 ஆந் திகதி கொழும்பில் மட்டும் நடத்தப்படும்.

9.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, பரீட்சைக்குத் தோற்றுவதற்காக உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, விண்ணப்பப்பத்திரத்தின் முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களின் விண்ணப்பதாரிகளை, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டுமே பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் அனுமதிப்பார். விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை வழங்குவது என்பது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டுள்ளார் என்ற அர்த்தத்தை தரமாட்டாது. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரி அழைக்கப்பட்டு, தகைமைகளைப் பரிசீலிக்கின்ற சந்தர்ப்பத்தில், பரீட்சார்த்திகள் தவறான தகவல்களை வழங்கியுள்ளனர் என்று வெளிப்படுத்தப்பட்டால் அல்லது தேவையான தகைமைளைக் கொண்டிருக்கவில்லையெனில், அவர்களது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும்.

9.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.- உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், "பணிப்பாளர் அதிபதி, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், இரண்டாவது தளம், தொழில் செயலகம், நாரஹேன்பிட்டி, கொழும்பு 05" என்ற முகவரியை 2021.07.28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுகின்ற தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021" என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தவறுதல் அல்லது தபாலினால் காலதாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9.5 விண்ணப்பப்பத்திரத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாணத்திற்கான ஆணையாளரால், அரச நொத்தாரிசினால், ஆயுதப்படைகளில் நியமிக்கப்பட்ட அதிகாரியால், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலரால் அல்லது அரசாங்க சேவையில் பதவிநிலை தரத்திலுள்ள நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்ற அலுவலரொருவரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

9.6 தவறான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை.- விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்கின்ற போது விண்ணப்பதாரிகள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், சரியான தகவல்களை மட்டுமே வழங்குதல் வேண்டும். பரீட்சார்த்தியொருவர், பரீட்சைக்கு ஏற்புடையதான ஒழுங்குவிதிகளுக்கமைவாக இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியில்லையென்று கண்டறியப்பட்டால், அவரது பரீட்சார்த்த நிலை பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்த நிலையிலும் இரத்துச் செய்யப்படுவதற்கு உட்பட்டதாகும். பதவியை ஏற்றதன் பின்னர் பரீட்சார்த்தியால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் தவறானது என்று கண்டறியப்பட்டால், அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

10. பரீட்சைக்கான அனுமதி.- அனுமதி அட்டைகள், பரீட்சைத் திகதிக்கு அதாவது 2021.09.05 ஆந் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக விண்ணப்பதாரிகளைச் சென்றடையும் வகையில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விநியோகிக்கப்படும். அனுமதி அட்டையொன்றுடன் மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள், பரீட்சை நிலையத்துடன் தொடர்புடைய அனுமதி அட்டையில் வைக்கப்பட்டுள்ள கையொப்பத்தை உறுதிப்படுத்தி, பரீட்சை மண்டபத்தின் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சைத் திகதியான 2021.09.05 ஆந் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்றால், அதனை 011 2786541/011 2786542 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும். பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவு தொடர்பான பற்றுச்சீட்டின் பிரதியையும், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கு விண்ணப்பப்பத்திரத்தினைப் பதிவுசெய்தமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியையும் இணைத்து தங்களின் விசாரணையின் போது சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

11. விண்ணப்பதாரிகள், அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வை யாளருக்கு ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப்பத்திரம்.

12. விண்ணப்பதாரிகள், பரீட்சையை நடத்தும் நோக்கத்திற்காக தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். இந்த ஒழுங்குகளை பரீட்சார்த்தியொருவர் மீறினால், அவர் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தண்டனையொன்றுக்கு ஆளாவார்.

13. பரீட்சையை நடத்துவது, நியமனங்களை வழங்குவது மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் தொழில் அமைச்சின் செயலாளரிடம் காணப்படும்.

குறிப்பு.- இந்த அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

எம். பி. டீ. யூ. கே. மாபா பத்திரண,
செயலாளர்.

தொழில் அமைச்சு,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05,
2021, யூன் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

1.0 விண்ணப்பதாரியின் விபரங்கள் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கிலத்தில் கெப்பிற்றல் எழுத்தில்) (உதாரணம் : PERERA A. B. C.)
1.2 முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
1.3 (ஆங்கிலத்தில் கெப்பிற்றல் எழுத்தில்) :----.
1.4 முழுப்பெயர் :----.
(சிங்களத்தில்)
1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.0 2.1 பால் : ஆண்-1, பெண்-0 : ☐ (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்).

2.2 நிரந்தர முகவரி :----.
(ஆங்கிலத்தில் கெப்பிற்றல் எழுத்தில்)

2.3 நிரந்தர முகவரி :----.
(சிங்களத்தில்)

2.4 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
(i) (சிங்களத்தில்) :----.
(ii) ஆங்கிலத்தில் கெப்பிற்றல் எழுத்தில் :----.

2.5 தொலைபேசி இலக்கம் :----.

2.6 மின்னஞ்சல் :----.

3.0

3.1 திருமணமானவரா/திருமணமாகாதவரா : திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2 : ☐
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :
ஆண்டு : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 பரம்பரையாக இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு வழி இலங்கைப் பிரசையா ? :----.

4.0 கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :

(i) பரீட்சை ஆண்டும் மாதமும் : ஆண்டு :------- மாதம் :-------
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள்-

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| (1) | | (6) | |
| (2) | | (7) | |
| (3) | | (8) | |
| (4) | | (9) | |
| (5) | | (10) | |

4.2 க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை :

(i) பரீட்சை ஆண்டும் மாதமும் : ஆண்டு :-------- மாதம் :--------
(ii) சுட்டிலக்கம் :---------
(iii) பெறுபேறுகள்-

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| (1) | |
| (2) | |
| (3) | |
| (4) | |
| (5) | |

5.0 கல்வித் தகைமைகள்

| கற்கைநெறியின் பெயர் | நிறுவனம் | காலப்பகுதி | பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | | | |

6.0 ஏதேனும் குற்றத்துக்காக தாங்கள் நீதிமன்றத்தால் எப்போதாவது குற்றவாளியாக்கப்பட்டிருந்தீர்களா ?
(உரிய கூட்டிற்குள் ✓ என்ற குறியீட்டை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், குற்றம் பற்றிய, எந்த நீதிமன்றத்தால் தாங்கள் குற்றவாளியாக்கப்பட்டீர்கள் என்பது பற்றிய மற்றும் தண்டனையின் தன்மை பற்றிய விபரங்களைத் தருக :----.

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் : இலக்கம் :------- திகதி :-------
(iii) செலுத்தப்பட்ட தொகை :-------

| பற்றுச்சீட்டின் ஒரு மூலையை இங்கே ஒட்டவும். |
|---|

8.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) என்னால் இவ்விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இந்த விண்ணப்பப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படாமையால்/ தவறாக ஏதேனும் பகுதி நிரப்பப்பட்டமையால் ஏதேனும் நட்டம் ஏற்பட்டால் அதனைப் பொறுப்பேற்பதற்கும் நான் இணங்குகின்றேன். மேலும், இந்த விண்ணப்பப்பத்திரத்தின் அனைத்துப் பிரிவுகளும், சரியாக நிரப்பப்பட்டுள்ளனவென்று நான் சான்றுப்படுத்துகின்றேன்.

(ஆ) தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட பரீட்சை ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும், அத்துடன், இத்தால் காணப்படுகின்ற நிபந்தனைகளின் நியதிகளின்படி நான் தகுதியற்றவரென வெளிப்படுத்தப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முடிபுக்கும் கட்டுப்படுவதற்கு நான் இணங்குகின்றேன்.

(இ) இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பிழையானதென நியமனத்திற்கு முன்னர் கண்டறியப்பட்டால், நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும், இப்பதவிக்கு நான் நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால், நான் நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

இந்த விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் .......................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-------
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

06-347

திருத்தம்

**வர்த்தக அமைச்சின் வர்த்தகத் திணைக்களம்**

**வர்த்தக தர III உதவி இயக்குநர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டித் தேர்வு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.05.07 ஆந் திகதிய வர்த்தமானி இல. 2227 இல் பிரசுரிக்கப்பட்ட "வர்த்தக தரம் III உதவி இயக்குநர் பவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020 (2021)" இல் பின்வரும் திருத்தங்களை அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது.

மேற்படி அறிவித்தலின் 9(vii) இல் குறிப்பிடப்பட்ட மேற் குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2021.07.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அறிவித்தலின் பிரிவு 05 இல் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச வயதெல்லையானது, மூல வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதியாக முன்னர் (உ-ம் : 2021.06.04) இருந்தவாறே அமையும்.

ஜே. எம். பி. ஜயவர்தன,
செயலாளர்,
வர்த்தக அமைச்சு.

வர்த்தகத் திணைக்களம்,
கொழும்பு 3,
2021, யூன் 23.

6-427

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.